# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

**கூட்ட எண்.44/2019** **நாள். 31.07.2019**

## தனி அலுவலர் அவர்களின் ஜுலை 2019 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

31.7.2019ம் நாள் புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் ஜுலை 2019 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | ஜுலை 2019 | 0 | 0 | 17 | 8 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஜுலை 2019 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

25.07.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | அனகாபுத்தூர் நகராட்சி வார்டு எண்.1 முதல் 9 வரை உள்ள 6 எண்ணம் சிறிய உயர் மின் கோபுர விளக்குகளை (12 மீட்டர்) எல்.இ.டி விளக்குகளாக மாற்றுதல் பணி | 9.80 | மெசஸ்.லஷ்மி எண்டர்பிரைசஸ்<br>மெசஸ். மகாலஷ்மி எண்டர்பிரைசஸ் | 0.10 % குறைவு<br>1.38 % அதிகம் |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சி வார்டு எண்.10 முதல் 18 வரை உள்ள 6 எண்ணம் சிறிய உயர் மின் கோபுர | 9.80 | மெசஸ்.லஷ்மி எண்டர்பிரைசஸ்<br>மெசஸ். மகாலஷ்மி எண்டர்பிரைசஸ் | 0.10 % குறைவு<br>1.38 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | விளக்குகளை (12 மீட்டர்) எல்.இ.டி விளக்குகளாக மாற்றுதல் பணி | | | |

அலுவலகக்குறிப்பு

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண். 4</u>

19.07.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | பசுமை உரக்குடிலுக்கு Hydraulic Rag Bailing Machine வாங்குதல் பணி | 6.00 | மெசஸ். டோடல்ஸ் எண்விரான்மெண்ட் சொலுசியன்ஸ்<br>மெசஸ்.கார்வின் டின்கம் இன்ஜி.(பி) லிட். | குறைவு<br>அதிகம் |
| 2. | பசுமை உரக்குடிலில் மக்கும் குப்பைகளை தூளாக்கும் இயந்திரம் வாங்கும் பணி (Bio – Pulveriser Machine) | 2.00 | மெசஸ். டோடல்ஸ் எண்விரான்மெண்ட் சொலுசியன்ஸ்<br>மெசஸ்.கார்வின் டின்கம் இன்ஜி.(பி) லிட். | குறைவு<br>அதிகம் |
| 3. | பசுமை உரக்குடிலில் மக்கும் குப்பைகளை தூளாக்கும் இயந்திரத்தில் புதிய பிளேடுகளை பொருத்தி பழுது நீக்கம் செய்தல் பணி | 0.85 | மெசஸ். டோடல்ஸ் எண்விரான்மெண்ட் சொலுசியன்ஸ்<br>மெசஸ்.கார்வின் டின்கம் இன்ஜி.(பி) லிட். | குறைவு<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.5</u>

31.07.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | அனகாபுத்தூர் நகராட்சி வார்டு எண்.1 முதல் 9 வரை மழைநீர் சேகரிப்பு தொட்டி | 2.50 | ராஜலஷ்மி காண்ட்ராக்ஸ்<br>எஸ் வி பி | 0.10 % குறைவு<br>1.50 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைத்தல் பணி | | எலக்ட்ரிகல்ஸ் | |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சி வார்டு எண்.10 முதல் 18 வரை மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல் பணி | 2.50 | வி.குணாளன்<br>டி கே இண்டஸ்ரிஸ் | 0.10 % குறைவு<br>1.40 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :**குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.6**

05.07.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | பொது சுகாதார பிரிவிற்கு பெரிய புகை அடிக்கும் இயந்திரம் வாங்குதல் பணி | 7.00 | கார்த்திகா சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங்<br>பாவாணியம்மன் எண்டர்பிரைசஸ் | குறைவு<br>அதிகம் |
| 2. | மக்கும் மற்றும் மக்காத வகை குப்பைகள் தரம் பிரித்து வாங்க ஏதுவாக 80 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகள் 50 எண்ணம் சப்ளை செய்தல் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களின் Activity புத்தகம் சப்ளை செய்தல் பணி | 1.00 | பேன்சி ஏஜென்ஸி<br>ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் | குறைவு<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.7**

29.06.2019ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | 2019–20ம் ஆண்டிற்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் (Out Source) 150 பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் தகுதியுடைய ஒப்பந்ததாரர் மூலம் சப்ளை செய்தல். | 259.00 | மெசஸ்.ஜே கே டிரான்ஸ், | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதியளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏற்பளிப்பு கடிதம் (Letter of Acceptance) வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.
3. மெசஸ்.ஜே கே டிரான்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.8</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பராமரிக்கப்படும் தெருவிளக்குகளை பராமரிப்பு பணி செய்ய ஒரே ஒரு மின் பணியாளர் மட்டும் இருக்கும் காரணத்தால், தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியர் மூலம் (இயக்குதல் மற்றும் பராமரித்தல்) மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் கடித ந.க.எண்.13899/2016/டிஓ1 நாள்.24.03.2017ன்படி ஒரு வருட காலத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் மேற்படி பணிக்கு 09.05.2017 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த மெசஸ்.லட்சுமி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு நகர மன்ற தீர்மான எண்.117 நாள்.31.05.2017ல் அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில், 01.06.2017 அன்று ஒரு வருட காலத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்த காலம் 31.05.2018ம் தேதியுடன் முடிவடைந்ததால், மீண்டும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு உரிய வழிமுறைகளை பின்பற்றி பிரேரனை அனுப்பி வைக்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.13899/2016/டிஓ1 நாள்.28.05.2018ன் படி மேலும் ஒரு வருட காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இப்பணி 31.05.2019ல் முடிவடைய உள்ளதால், மீண்டும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு உரிய வழிமுறைகளை பின்பற்றி பிரேரனை அனுப்பி வைக்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடித ந.க.எண்.13899/2016/டிஓ1 நாள்.04.07.2019ன் படி 01.06.2019 முதல் 31.05.2020 வரை ஒரு வருட காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்து பணியினை தொடர்ந்து மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதியளிக்கலாம்.

1. பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிமைக்கு மன்றம் அனுமதியக்கலாம்.

<u>பொருள் எண்.9</u>

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிக கட்டிடங்கள் மற்றும் இதர பொது கட்டிடங்கள் உட்பட அமைந்துள்ள பகுதிகளில் உள்ள கழிவுநீர் நச்சுத் தொட்டியில் (Septic Tank) நிரம்பும் கழிவுநீரை சுகாதார முறையிலும் உயர்நீதிமன்றம் மற்றும் அரசாங்கத்தின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின் அடிப்படையில் அப்புறப்படுத்த வேண்டும் என்றும் நச்சு தொட்டியில் மனிதர்கள் எவரும் இறங்கி சுத்தம் செய்யக்கூடாது என்று அரசும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களும் பல்வேறு சமயங்களில் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2019–20ம் ஆண்டிற்கு அனகாபுத்தூர் நகராட்சியில் மேற்கண்ட நச்சுத் தொட்டி கழிவுகளை சுகாதார முறையில் அப்புறப்படுத்த வாகனங்கள் இல்லாததால் தனியார் வாகனம் மூலம் அதாவது (Compressor Septic Tank Lorry) காற்றழுத்தம் பொருந்திய உறிஞ்சியாக இருக்கும் வாகனம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் அமர்த்தவும், அதற்கான ஒப்பந்த வாகன உரிமையாளர் மூலம் ஒரு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.10</u>

அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பபட்ட வார்டு எண். 5ல் பாலாஜி நகர் 2வது தெரு கதவு எண்.8ல் குடியிருப்பில் வசிக்கும் திரு.பி.எம்.கணேசன் அவர்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு பயன்படுத்தி வந்தனர். அதற்கான குடிநீர் இணைப்பு எண்.1707 ஆகும். இந்நிலையில் மேற்கண்ட இடத்தினை அடுக்குமாடி குடியிருப்பாக மாற்றியுள்ளார். மேற்கண்ட குடியிருப்புகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க கோரியுள்ளனர். எனவே பழைய இணைப்பு எண்.1707–னை இரத்து செய்ய 09.07.19 தேதிய கடிதத்தில், பழைய குடிநீர் இணைப்பினை துண்டிப்பு செய்ய கோரியுள்ளார். இந்நகராட்சி குடிநீர் இணைப்பிற்கான துணை விதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண்.130,131,132,306(3) (சி) (டி) (இ) (எப்) (எச்) (ஐ) கீழ் உருவாக்கப்பட்ட விதிகளில் வரிசை எண்.(1)ல் உட்பிரிவு (இ)ன் படி குடிநீர் இணைப்பு வேண்டாம் என்று தெரிவிக்கும் பட்சத்தில் இரத்து செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குடிநீர் இணைப்பிற்கு மார்ச் 2020 வரை பயன்பாட்டு தொகையினை செலுத்தியுள்ளார். எனவே மேற்படி இணைப்பு எண்.1707ஐ கணிணி கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u> திரு.எம்.பி.கணேசன் மேற்கண்ட இடத்தினை விற்பனை செய்து விட்டதினாலும், அடுக்குமாடி குடியிருப்பில் மேற்கண்ட நபருக்கு எந்தவித உரிமையும் இல்லாததினால் அன்னாரின் பெயரில் உள்ள குடிநீர் இணைப்பு எண்.1707ஐ கணிணி கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.11</u>

அனகாபுத்தூர் நகராாட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்தால் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவற்றில் சுமார் 26 கி.மீ நீளத்திற்கு பகிர்மான குழாய் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. குழாய் பதிக்க சாலை தோண்டப்பட்டதால் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளது. இவற்றினை சரி செய்து தருமாறு பொது மக்களிடமிருந்தும், நலச்சங்களிலிருந்தும் தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகளை செப்பனிட விரிவான திட்ட அறிக்கை ரூ.200.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–20ம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதியளிக்கலாம்.

2.நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களுக்கு தினந்தோறும் குடிநீர் வழங்கும் பொருட்டு 2 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 55 கிலோ மீட்டருக்கான குடிநீர் பகிர்மான குழாய்கள் சாலையினை தோண்டி அமைக்கும் பணியினை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு சுமார் 26 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிக்கும்

பணிகள் முடிவுற்றது. இச்சாலைகள் அனைத்தும் மிகவும் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே சாலைகளை வரும் மழை காலத்திற்கு முன்பாக செப்பணிட பட வேண்டியுள்ளதால் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–20ல் அறிவிக்கப்பட்ட திட்ட நிதி ஒதுக்கீட்டின் படி சாலை பணிகளை மேற்கொள்ளலாம்.

<u>பொருள் எண்.12</u>

அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பபட்ட வார்டு எண். 5ல் பாலாஜி நகர் 10வது தெரு கதவு எண்.6/10ல் குடியிருப்பில் வசிக்கும் திருமதி.டி.விஜயலட்சுமி அவர்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு பயன்படுத்தி வந்தனர். அதற்கான குடிநீர் இணைப்பு எண்.546 ஆகும். பழைய இணைப்பு எண்.546–னை இரத்து செய்ய 19.07.19 தேதிய கடிதத்தில், தனக்கு குடிநீர் இணைப்பு வேண்டாம் என்று கோரியுள்ளார். இந்நகராட்சி குடிநீர் இணைப்பிற்கான துணை விதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண்.130,131,132,306(3) (சி) (டி) (இ) (எப்) (எச்) (ஐ) கீழ் உருவாக்கப்பட்ட விதிகளில் வரிசை எண்.(1)ல் உட்பிரிவு (இ)ன் படி குடிநீர் இணைப்பு வேண்டாம் என்று தெரிவிக்கும் பட்சத்தில் இரத்து செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குடிநீர் இணைப்பிற்கு செப்டம்பர் 2019 வரை பயன்பாட்டு தொகையினை செலுத்தி எந்தவித நிலுவையும் இல்லை என தெரிவிக்கும் பட்சத்தில் மேற்படி இணைப்பு எண்.546ஐ கணிணி கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மேற்குறிப்பிட்ட குடிநீர் இணைப்பு எண்.546ஐ கணிணி கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.13</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவது குறித்து மாதரி படங்கள் அடங்கிய மல்டி கலர் ஸ்டிக்கர் நகர் பகுதியில் உள்ள வீடுகளில் ஒட்டுவதற்கு ( Multi colour Sticker ) அச்சடித்து சப்ளை செய்ய 11.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | பேன்ஸி ஏஜன்சி, 27, ஜவஹர் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், சென்னை-118 | ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், ஏபி 101 பி,கே,எஸ் காம்ப்ளக்ஸ் 6வா வது மெயின் ரோடு, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை–40. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவது குறித்த விளக்கப்படம் அடங்கிய A4 மல்டி கலர் ஸ்டிக்கர் | 15.00 | 16.00 |
| 2. | குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துவது குறித்த விளக்கப்படம் அடங்கிய A4 மல்டி கலர் ஸ்டிக்கர் | 15.00 | 16.00 |

| | | | |
|---|---|---|---|
| 3. | மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட்ட வீடு என்று 8x 6 மல்டி கலர் ஸ்டிக்கர் | 5.00 | 6.00 |

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள பேன்சி ஏஜென்சி, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.14</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் அவ்வபோது அலுவலகத்திற்கு தேவைப்படும் பதிவேடுகள், கணினி பிரிண்டர் உபகரணங்கள் மற்றும் பணியின் அவசர அவசியம் கொண்டு அச்சடித்து தரும் படிவங்கள் பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு 2019–20ம் ஆண்டிற்கு பொது நிதியில் மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதிக்கும் . மேற்படி பணியை ஒப்பந்தப்புள்ளி கோரி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.15</u>

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டிற்கு தனியார் மூலம் வாடகை அடிப்படையில் டாடா ஏஸ் வாகனம் 2018–2019ம் ஒப்பந்தபுள்ளி விலைவிகிதத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்படி விலைவிகிதத்தில் வாகனம் விநியோகம் செய்யவும் அதற்கான செலவின தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்,
அனகாபுத்தூர் நகராட்சி.